ஏறக் குறைய ஒரு கோடியே 24 லட்சம் மக்கள் இந்த குடும்ப கார்டு முறையை பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ராமதாஸ் : தலைவர் அவர்களே, திருநெல்வேலியில் குடும்பக் கார்டு வேண்டுமென்று கேட்டபோது கலவரம் நடைபெற்றிருக்கிறது. கலகக்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டேன். அது போலீஸ் விவகாரம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். போலீஸ் இலாகாவும் அவர்களிடம் தான் இருக்கிறது. ஆகவே என்ன நடவடிக்கை எடுத்தார்கள் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நான் அவர்களிடம் குறிப்பிட்டது, இந்த மாதிரியான கலவரங்கள் எல்லாம் போலீஸ் இலாகாவை சேர்ந்தது என்று சொன்னேனே தவிர மற்ற வகையில் சொல்லவில்லை. அது பற்றிய தகவல்கள், விவரங்கள் என்னிடம், உணவுத் துறையில் இல்லை.

திரு என். ஆர், தியாகராஜன் : தேனி, போடி, பெரியகுளம் போன்ற நகரங்களில் கொடுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்னுடைய பிரதான கேள்வியில் கேட்டிருப்பது கிராமங்களுக்கு என்ன செய்திருக்கிறீர்கள், என்ன செய்யப் போகிறீர்கள் என்றுதான். தேனியை சுற்றி 15 கிராமங்கள் இருக்கின்றன. அங்கேயுள்ள பாக்டரியில் வேலை செய்வதற்கு வருகிறார்கள். அந்த கிராமங்களில் நெல்பயிர் உற்பத்தி கிடையாது. அவர்களுக்கு குடும்பக் கார்டு திட்டம் கொண்டுவரப்படுமா?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : தலைவரவர்களே, இந்த திட்டம் நெருக்கடியாக இருக்கிற இடங்களுக்குத் தேவையான கையிருப்பை வைத்துக்கொண்டு கொடுக்கப்படுவதாகும். இன்னும் அதிகமான அளவிற்கு கொள்முதல் செய்தால் மற்ற இடங்களுக்கும் கொடுக்க முடியும். பெரியகுளம் பகுதியிலே இன்னும் எவ்வளவோ கொள்முதல் செய்யலாம். இப்போதே கனம் உறுப்பினர் போன்றவர்கள் எல்லாம் சேர்ந்து விளைச்சல் முழுவதையும் கொள்முதல் செய்யலாம் என்ற நிலைமைக்குக் கொண்டு வந்தால் நல்ல நிலைமையில் செய்யலாம்.

Seizure of rice

***151 *Q.*—THIRU N. R. THIAGARAJAN :** Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether 80 bags of rice were seized from a lorry named Adiselvam MDA 1716 on 27th September 1967 at Theni, in Madurai District ;

(*b*) whether the police have seized that lorry ; and

(*c*) whether the lorry-owner was prosecuted ?

அரிசிப் பறிமுதல்

151 வினா—திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை ஜில்லா தேனியில் 27-9-1967-ம் தேதியன்று எம் டி ஏ 1716 ஆதிசெல்வம் என்னும் லாரியில் 80 மூட்டை அரிசி பிடிபட்டதா?

(இ) போலீசாரால் அந்த லாரி பறிமுதல் செய்யப்பட்டதா?

(உ) அந்த லாரி முதலாளி மீது குற்ற வழக்கு தொடரப்பட்டதா ?

2nd March 1968]

THE HON. THIRU K. A. MATHIALAGAN : (*a*) *to* (*c*) The Sub-Inspector of Police, Then , stopped Lorry MDA 1716 by name " Adhi Selvam " at about 7-30 p.m. on 6th September 1967 while it was proceeding along Railway Feeder Road, Theni Municipal Town, and searched the lorry. The lorry was found to contain 80 bags of rice without a valid permit. The lorry and the rice were seized by him and the lorry was produced before the District Magistrate (J), Madurai, and it was released on bond. The cost of the rice, namely, Rs. 2,691–65 was remitted on 30th September 1967 at the District Magistrate Court, Madurai. The Proprietor of the lorry, Thiru S. Ayyappa Naidu, the lorry driver and five other. involved in this case were arrested and prdouced before the Court. All of them were released on bail. The case has since been transferred to the Sub-Divisional Magistrate, Usilampatti.

Prosecution against the following individuals has been sanctioned in Madurai Collector's Roc. P6 5284/G. 68, dated 3rd February 1968 for having committed an offence under clause 3 (1) of the Madras Paddy and Rice Dealers (Licensing and Regulation) Order, 1966:—

(1) Thiru Ayyappa Naidu, s/o Subba Naidu, Pamalnaickenpatty, driver of Lorry MDA 1716.

(2) Thiru Sankar, son of Athinarayana Nadar, Theni, owner of Lorry MDA 1716.

(3) Thiru Nataraj**n, son of Kamatchi Chettiar, cleaner of Lorry MDA 1716, Boothipuram.

(4) Thiru Mani, son of Maya Thevar, Theni.

(5) Thiru Subbayyan, son of Nagar Asari, Allinagaram.

(6) Thiru Rasu, son of Vellayya Pillai, Allinagaram.

(7) Thiru Pandian, son of Sannasi Pillai, Allinagaram.

The Police have not yet filed the charge sheet in the Court.

As regards seizures, the Collector of Madurai has reported that separate action is also being taken against the above individuals under section 6-A of the Essential Commodities (Amendment) Act, 1966, for the confiscation of seizures. The hearing date was fixed on 19th February 1968.

திரு. என். ஆர். தியாகராஜன் : இந்த லாரிகள் ஜாமீனில் விடப்பட்ட காரணத்தால், அடுத்த வாரமே அவர்கள் திருச்சியிலிருந்து மணப்பாறை வழியாக மீண்டும் மூட்டைகளை ஏற்றிக்கொண்டு சென்றிருக்கிருக்கள். அங்கேயும் பிடிக்கப்பட்டு ஜாமீனில் விடப்பட்டார்கள். சென்ற வாரம் மிக வும் ருசிகரமான, நீளமான கதை ஒன்று நடந்திருக்கிறது. கூடலூர் சர்க்கார் கோடவுனிலிருந்து நெல்லை ஏற்றி மதுரை கோடவுனுக்கு அதே லாரியில் கொண்டுபோயிருக்கிறுர்கள். அப்போது அந்த லாரி, நெ. 1716 என்றிருப்பதை 716 என்று நம்பர் பிளேட்டையே மாற்றிக் கொண்டு போயிருக்கிறுர்கள். அதிலும் கொண்டுபோன நெல் மூட்டை களை நடுவிலேயே விற்றுவிட்டார்கள். அது சர்க்கார் கோடவுனுக்குப் போக வில்லை. மீண்டும் அதைப் பிடித்து அரஸ்ட் செய்து கொண்டு வந்திருக் கிறுர்கள், கூடலூருக்கு. ஆகையால் இந்த நடவடிக்கைகளை தீவிர மாகப் பரிசீலனை செய்தால் நல்லது. அந்த லாரிகளைப் பறிமுதல் செய் வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமோ?

[2nd March 1968

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : லாரிகளைப் பிடிக்க வேண்டுமென்பதற்காகத்தான் சில விதிகள் தேவைப்படுகின்றன. அதைப்பற்றி பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம். இதுபோன்ற விவரங்கள் கனம் உறுப்பினர் கூறுவது மன்றத்தில் விவரம் தெரிந்துகொள்ள உதவுகிறது. இதுபோன்ற காரியங்கள் அவர்கள் இருக்கும் சுற்று வட்டாரங்களிலேதான் அதிகமாக நடந்து கொண்டிருக்கின்றன. அவர்களுடைய நல்ல எண்ணத்தைப் போன்றே அரசாங்கமும் சமூக விரோத சக்திகளை பிடிக்கத் தீவிரமாக நடவடிக்கை எடுக்கிறது. கனம் உறுப்பினர் அவர்களுக்கு இந்த கள்ளக்கடத்தல் பற்றிய விவரங்கள் சீக்கிரமாகக் கிடைத்து விடுகின்றன. அவர்கள் அதை அவ்வப்போது தெரிவித்தால், அரசாங்க அதிகாரிகளும் ஒத்துழைப்பார்கள். என்னிடத்தில் தகவல்கள் வந்தாலும், அவர்களுக்கு நன்றியுள்ளவனாக இருப்பேன். இந்த அரசாங்கமும் நன்றி செலுத்தும்.

திரு. சி. பி. சிற்றரசு : லாரிகளைப் பறிமுதல் செய்வதற்கு சட்டமில்லை என்றால் அந்த லாரிகளை ஆறு மாத காலத்திற்காவது ஓட்டக்கூடாது என்று தடுக்க சட்டம் இருக்கிறதா? அப்படி ஏற்பாடு செய்ய சர்க்கார் உத்தேசிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதைப்பற்றி அரசாங்கம் தீவிரமாகப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, ஆறு மாதத்திற்குள் தேனியிலும், போடி, கொடைக்கானல், பெரியகுளத்திலும் சில சமூக துரோகிகள் கூட லாரிகளை கூட்டாக வாங்கி, 10 லாரிகளுக்கு மேல் வைத்துக்கொண்டு, கொடைக்கானல் வழியாக தினசரி நெல் கடத்தி வருகிறார்கள். அதைப்பற்றிய நம்பகமான தகவல்களும், கடிதங்களும், அதிகமாக இரண்டு மூன்று தினங்களுக்குள் என்னிடம் வந்திருக்கின்றன. அரசாங்கம் ஒற்றர்களை வைத்து நடவடிக்கை உடனே எடுக்க வேண்டும். கள்ளக்கடத்தல் காரணத்தால் எங்கள் ஊரில் ஒரு படி அரிசி மூன்று ரூபாய்க்கு விற்கப்படுகிறது. நம்பமாட்டீர்கள். அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது அரசாங்கம்?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதை ஒப்புக்கொள்கிறேன். கம்பம் பகுதியில் பச்சைப்பசேல் என்று வயல்கள் இருந்தாலும் அந்த உணவு தானியங்கள் அங்கே பயன் படாமல் பல காலமாக இருந்து வருகிறது. கள்ளக் கடத்தல்காரர்கள் கடத்துவதை ஒரு கலையாகவே நடத்தி வருகிறார்கள். நம்முடைய விழிப்புக்கும் அவர்களுடைய குயுக்திக்கும் இடைவிடாத போராட்டம் நடைபெற்று வருகிறது. அதில் நண்பர் தியாகராஜன் போன்றவர்கள் கொடுக்கும் தகவல்கள் பயன்படுமானால் இந்த அரசாங்கம் அதை ஏற்றுக்கொள்ளும்.

Price of paddy

***152 *Q.*—THIRU N. R. THIAGARAJAN: Will the Hon. the Minister for Food be pleased to state—**

(*a*) the basis on which the procurement price of foodgrains is fixed in the Madras State ;

(*b*) the price per quintal of paddy, in the Madras State ;

(c) whether the agriculturists have requested to increase the price of paddy ; and

(*d*) if so, the action taken thereon by the Government ?